மன்/பாலையடிப்புதுக்குளம் றோ.க.த.க.பாடசாலை
(மடு வலயம்)
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை 2020 –பகுதி1-பயிற்சி 17

நேரம்: 12 நிமிடங்கள்

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


1. சரியாக ஒழுங்குபடுத்தப்பட்ட விடையைத் தெரிவு செய்க?

   1. பல்லி – எலி – யானை - சிங்கம்
   2. யானை - சிங்கம் - எலி - பல்லி
   3. பல்லி - சிங்கம் - யானை - எலி

4. சரியற்ற கோவையைத் தெரிவு செய்க?

   1. 4x5+10=30 2. 5 x5+5=30 3. 6 x5÷2=30

2. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின்மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் விடையைத் தெரிவு செய்க?



1. THE 2. ⊓⊔∃ 3. ⊤⊔∃

4. வீதி ஒன்றின் வலது பக்கத்தில் உள்ள வீடுகளின் இலக்கங்கள் 11,25,39,47 என்பனவாகும். இடது பக்கத்தில் உள்ள வீடுகளின் இலக்கங்கள் 36,42,50,64 என்பனவாகும். எனின் 96 ஆம் இலக்க வீடு எந்தப் பக்கத்தில் இருக்கும்?

   1. வலது 2. இடது 3. நடு

- வினா 5,6,7 இற்கு பின்வரும் தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.

ராமுவின் மனைவி இராசாத்தி ஆவாள். அவர்களுக்கு கயல், அமுதன் என இருபிள்ளைகள் உள்ளனர். கயல் ரகுவினைத் திருமணம் செய்து அவர்களுக்கு கவி,அபி என இரு மகள்கள் இருக்கின்றனர்.

5. கவிக்கு இராசாத்தி என்ன உறவு முறை?

1. பேர்த்தி 2. அப்பம்மா 3. அம்மம்மா



6. ரகுவிற்கும் ராமுவிற்குமான உறவுமுறை யாது ?


1. மாமா - மருமகள் 2. அப்பா-மகன் 3. பேரன்

7. அபி, அமுதனை எவ்வாறு அழைப்பாள் ?

1. சித்தப்பா 2. மாமா 3. அண்ணா

மாணவர்கள் விரும்பும் உணவுகள் தொடர்பான தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு 8,9,10 ஆம் வினாக்களிற்கு விடையளிக்க.

உணவு	கமல்	விமல்	அமல்	நிமல்
தோசை				
அப்பம்				
இட்லி				
பிட்டு				

 =விருப்பம்  =விருப்பமில்லை  =ஓரளவுவிருப்பம்

8. எந்த உணவையும் விரும்பாதவர் யார்?

1. கமல் 2. நிமல் 3. அமல்

9. மூன்று உணவையும் ஓரளவு விரும்புவர் மாணவன் யார்?

1. விமல் 2. கமல் 3. நிமல்

10. மூன்று பேர் விரும்பாத ஆனால் ஒருவர் மட்டும் விரும்பம் உணவு எது?

1. அப்பம் 2. இட்லி 3. பிட்டு

மன்/பாலையடிப்புதுக்குளம் றோ.க.த.க.பாடசாலை
(மடு வலயம்)
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை 2020 – பகுதி 2 - பயிற்சி 12

01) பின்வரும் பாடலினை வாசித்து விடையளிக்கவும்.

இருவிளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே
இராக்காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே
சூரியன்போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே
தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே
தயிர்க்கடலில் வெண்ணெய்போல வெண்ணிலாவே
தனிவிசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே

1. இரவுக்காலத்தில் ஒளி கொடுப்பது எது?
   .....
2. இங்கு வந்துள்ள உவமானம் யாது?
   .....
3. இங்கு சூரியனும் சந்திரனையும் குறிக்கும் ஒரு சொல் யாது?
   .....
4. விசும்பிற்றவழ்ந்திடுவாய் என்பதை பிரித்தெழுதுக?
   .....
5. இங்கு அதிக தடவை வந்துள்ள சொல் எது?
   .....
6. கதிரவன் என்பதன் ஒத்தகருத்துச் சொல்?
   .....

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1. எனது தோட்டத்தில் மலரும் ஒவ்வொரு பூவும் வாசனை..... (மிக்கது,மிக்கவை)
2. சில பாடல்கள் கேட்பதற்கு மிகவும்.....
   .....(இனிமையானது,இனிமையானவை)

03) பின்வரும் பழமொழிகளுக்குரிய கருத்தை எழுதுக.

01. தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்.....
02. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.....
03. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.....

04) சுருக்கமான விடை தருக.

1. ஒரு நாடகத்திற்காக நுழைவுச்சீட்டுகளை விற்பதன் மூலம் கமல் சேகரித்த பணம் ரூ.1525.00 ஆகும். கண்ணன் சேகரித்த பணம், மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூ.175 இனால் கூடியது. மோகன் சேகரித்தப்பணம் கமல் சேகரித்தப்பணத்திலும் பார்க்க ரூ.175 இனால் குறைவானது. மூவரும் சேகரித்த பணம் யாது?

   ……..…..

2. ஒரு தேக்கரண்டி கொள்ளத்தக்க திரவத்தின் கனவளவு 5 ml ஆகும். ஒரு நோயாளிக்கு ஒரு தடவைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு நாளுக்கு மூன்று தடவை மருந்து கொடுக்கப்பட்டது. அவருக்கு ஒரு நாளுக்கு கொடுக்கப்பட்ட மருந்தின் கனவளவு யாது?


   ……..……..

3. ஒரு காணியில் $^{1}/_{2}$ காய்கறிகளும் $^{1}/_{4}$ இல் பூச்செடிகளும் நடப்பட்டுள்ளன. அவ்வாறு நடப்பட்ட நிலத்தின் அளவு மொத்த காணியில் என்ன பகுதியாகும்?

   ……

4. மிகச்சிறிய எண்ணை தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக.

   $^{9}/_{10}$, $^{3}/_{4}$, 0.7,0.8 ……..……..……..

5. 

   உருவிலுள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது? ……

05)சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. தண்டில் காய்க்கும் தாவரம்

   1.மங்குஸ்தான் 2. றம்புட்டான் 3. விளிம்பி 4.கொய்யா

2. தத்திச் செல்வதன் மூலம் இடம்பெயரும் விலங்கு

   1. தவளை 2. ஓணான் 3. பல்லி 4. முதலை

3. சக்தி கூடுதலாக விரயமாகும் விளையாட்டு

   1. பாரந்தூக்குதல் 2. கரம் 3. சதுரங்கம் 4.சோகி விளையாட்டு

4. பனையோலை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பொருள்

   1. தட்டு 2. குடம் 3. தலையணை 4. அகப்பை

5. உலகறிந்த இலங்கையின் பிரதான தத்துவஞானி

   1. கலாநிதி ஆனந்தக்குமாரசுவாமி 2. கலாநிதிரீ.பி ஜாயா

   3. ஆறுமுகநாவலர் 4. கலாநிதி C.W.W.கன்னங்கரா